

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக தகவல் தொழில்நுட்ப அணி திருமயம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அரிமளத்தில் நடைபெற்ற மாபெரும் இரத்ததான முகாமில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு இரத்த தான முகாமை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கழக மாநில மருத்துவர்அணி துணை செயலாளர் மருத்துவர் அண்ணாமலை ரகுபதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பொன்.ராமலிங்கம், வீ.ஆர்.இளையராஜா, பேரூர்க் கழகச் செயலாளர் செந்தில்குமார், மேகலா முத்து, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் சுதர்சன் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி.விமலாதித்தன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.விஸ்வநாதன், ரா.பழனிக்குமார், கோ.கார்த்திகா கோவிந்தராஜ், எஸ்.சுரேந்திரன், வி.கண்ணா, சொ.பரிமளா, மு.முகமது அப்துல்லா, கே.படிக்காசு, போஸ். வினோதன், கே.ஆறுமுகம், கா.சிவகுமார், எஸ்.மெய்யப்பன், சி.அருண்குமார், ராஜேஷ்கண்ணன், கா.கிருஷ்ணசாமி, பழனிக்குமார் மற்றும் திருமயம் சட்டமன்றத் தொகுதி ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் கழகத் தலைவர், முதல்வர், கோடையில் மக்களின் தாகம் தீர்க்க நீர்மோர் பந்தல் திறக்க உத்தரவிட்டதையொட்டி ஓமலூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் திறந்து வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் ஓ.எம்.ரமேஷ், பேரூர் கழகச் செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் அழகிரி, கே.எஸ்.ஆர்.சண்முகம், அவைத்தலைவர் குமரன், மணி, பேரூராட்சித் தலைவர் செல்வராணி, துணைத்தலைவர் புஷ்பா உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - ச.முரசொலி எம்.பி. பங்கேற்பு!

# தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு 62 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

## தஞ்சையில் அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



தஞ்சாவூர், ஏப்.2–

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம் பஞ்சநதிக்கோட்டையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்புத் துறை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் அதிதிறன் நேரடி நெல் கொள்முதல் நிலை யத்தினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில்துறை அமைச்சர் டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திர சேகரன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர் வாக இயக்குநர் அ.சண்முகசுந்தரம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., முதுநிலை மண்டல மேலாளர் நெ.செல்வம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் தலைமை பொறியாளர் வெங்கடே சன் ஆகியோர் முன்னிலை வகித் தனர்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரி வித்ததாவது :–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர் களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சா வூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம் பஞ்ச நதிக்கோட்டையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர் வோர் பாதுகாப்புத் துறை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார் பில் ரூ.141 இலட்சம் மதிப்பீட்டில் அதிதிறன் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட் டுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யும் நெற்பயிர்களுக்காக சுமார் 3000 நேரடி நெல் கொள்முதல் நிலையங் கள் ஒவ்வொரு காரிப் சீசனிலும் திறக்கப்படுகின்றன. அதில் 90 சத வீதம் டெல்டா மாவட்டத்திலேயே செயல்படுகின்றன. தற்போது ஒவ் வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலும் விவசாயிகளிடம் இருந்து ஒரு நாளைக்கு சுமார் 40 மெட்ரிக் டன் 1000 மூட்டைகள் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. உச்ச அறுவடை காலத்தில் இது தற்போ தைய தேவைக்கு போதுமானதாக இல்லை. எனவே, கொள்முதல் நடவ டிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தாலுக்காவில் உள்ள பஞ்சநதிக் கோட்டை கிராமத்தில் அமைத்துள்ள நேரடி நெல் கொள்முதல் மையங்க ளில் ஒன்றில் முன்னோடி திட்டமாக ரூ.141 இலட்சம் மதிப்பீட்டில் அதிதி றன் நேரடி நெல் கொள்முதல் நிலை யம் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட் டுள்ளது.

அதிதிறன் நேரடி நெல் கொள்மு தல் நிலையத்தில் உள்ள நன்மை கள் என்னவென்றால் இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்படும் நெல் வயலில் இருந்து நேரடியாக மூட்டை இல்லாமல் டிராக்டர், டிப்பர் மூலமாக நெல்லை அதிதிறன் கொள்முதல் நிலையத்தில் பெற முடியும். இத னால் கொள்முதல் மையத்திற்கு கொண்டு வரும்போது சாக்கு பயன் பாட்டை குறைக்கலாம். அதிதிறன் நேரடி நெல் கொள்முதல் நிலையத் தில் தொடர்ச்சியான கொள்முதல் செயல்முறை தயாரிப்புக்காக உயர்த்தி (எலிவேட்டர்) மூலமாக நேர டியாக சேகரிப்பு முனைக்கு மாற்றப் படும் அதன் கொள்ளளவு சுமார் 16 மெட்ரிக் டன் ஆகும்.

இதை சுத்தம் செய்யும்போது மாசுக்கட்டுப்பாடு பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக சேகரிப்பு முனை யிலிருந்து நெல் சுத்தம் செய்யப்படு கிறது. சூறாவளி தூசி தயாரிப்பான் இதில் இணைக்கப்பட்டுள்ளது. சுத் தம் செய்தல் மற்றும் தரப்படுத்துதல் செயல்முறைக்கு பிறகு நெல் சேமிப்பு முனைக்கு இயந்திரத்தன மாக மாற்றப்பட்டு சேமிப்பு முறை யிலிருந்து நெல் நேரடியாக தானி யங்கி எடை மற்றும் தானியங்கி பேக்கிங் மூலம் மூட்டையாக தைக் கப்பட்டு கன்வேயர் மூலம் லாரிக்கு ஏற்றப்படுகிறது. இதனால் விவசாயிகளின் நெல் சிந்தாமல் சித றாமல் பத்திரமாக எடை போடப்பட்டு அதற்கு உண்டான பணப்பட்டுவாடா வும் செய்யப்படுகிறது. இவ்வாறு செய்வதால் நெல் போக்குவரத்தை விரைவுப்படுத்த இவ்வாறான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மிக வும் உபயோகமாக இருக்கும் இந்த இயந்திரத்தின் கொள்ளளவு ஒரு மணி நேரத்திற்கு 15 டன் எடுத்துக் கொள்ளும். மேலும், ஒரு நாளைக்கு சுமார் 10 மணி நேரம் கொள்முதல் செய்யும் போது 150 மெட்ரிக் டன் அதிவிரைவாக கொள்முதல் செய்ய லாம். இதனால் விவசாயிகளில் காத் திருக்கும் நேரம் குறையும்.

விரைவில் தேவைப்படும் அனைத்து மாவட்டங்களிலும் அதிதி றன் நேரடி நெல்கொள்முதல் நிலை யம் அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் ஆட்சிக்கு வந்த பிறகு சன்ன ரகத்திற்கு 1,960 ரூபாயாக இருந்து 2,450 ரூபாயும், பொது ரகத்திற்கு 1,905 ரூபாயாக இருந்து 2,045 ரூபாயும் கடந்த செப்டம்பர் மாதம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல ஊக்கத்தொகை நெல் குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு 130 ரூபாயும், பொது ரகத் திற்கு 107 ரூபாயும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. வருங்காலத் தில் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை கூடுதலாக கிடைக்க வாய்ப் புள்ளது. தமிழகத்தில் கடந்த ஆண்டு விட இந்த ஆண்டு கூடுதலாக 6 லட் சம் மெட்ரிக் டன் நெல் கூடுதலாக வந் துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்த குருவைப் பருவத்தில் கூடுத லாக ஒரு லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் இதுவரை 27 லட் சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய் யப்பட்டுள்ளது. கடந்தாண்டு 36 லட் சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தாண்டு நாள் ஒன்றுக்கு 62 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்மு தல் செய்யப்பட்டுள்ளது. இது சரித் திர சாதனை. பல்வேறு வாகனங்கள் மூலம் நெல் மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

திறந்தவெளியில் நெல் மூட்டை கள் நனைவதை தடுப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டு, செமி குடோன்கள் அமைக்கப் பட்டுள்ளது. இரண்டு லட்சம் விவசா யிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட தைத் தொடர்ந்து தற்போது வரை 1.90 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. கடந்தாண்டு 21 லட்சத்து 63 ஆயி ரத்து 50 மெட்ரிக் டன் நெல் கொள்மு தல் செய்யப்பட்டது. நடப்பாண்டில் 27 லட்சத்து 72 ஆயிரத்து 700 மெட் ரிக் டன் கொள்முதல் செய்யப்பட் டுள்ளது.

கடந்த ஆண்டு 2850 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது. இந்த ஆண்டு 3,293 நேரடி கொள்முதல் நிலையங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 2 லட்சத்து 49 ஆயிரத்து 518 விவசாயிகள் பயன டைந்தனர். இந்த ஆண்டு 3 லட்சத்து 61 ஆயிரம் விவசாயிகள் பயனடைந் துள்ளனர். 6,400 கோடி ரூபாய் விவ சாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய் யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.11 லட் சம் விவசாயிகளிடம் இருந்து, 6 லட் சத்து 10 ஆயிரம் டன் நெல் கொள்மு தல் செய்யப்பட்டு உள்ளது. 1168 கோடி ரூபாய் பணம் விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை 18.10 லட்சம் ரேஷன் கார்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பித்த வர்களுக்கான ரேஷன் கார்டு அச்ச டிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு விரைவில் வழங்கப் படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் 47 ஆயிரத்து 534 ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. 2,600 ரேஷன் கடைகள் பகுதி நேர கடைகளாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என உணவு மற்றும் உண வுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்நிகழ்ச் சியில் அதிதிறன் நேரடி நெல்கொள் முதல் நிலையம் அமைப்பதற்காக இடம் வழங்கிய விவசாயி லெட்சுமி நாராயணனுக்கு அமைச்சர் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் எம்.இராமச்சந் திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ் சுகம் பூபதி, மாவட்ட வழங்கல் அலுவ லர் கமலகண்ணன், வருவாய் கோட் டாட்சியர் இலக்கியா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் செயற்பொறியாளர் குணசீலன், உதவி செயற்பொறியாளர்கள் இளங்கோ, தர்மராஜ், லாவண்யா, பைங்குழலி, S.P.விக்னேஷ், சதய விழாக் குழுத் தலைவர் து.செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் - மதுரை வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ. - மு.மணிமாறன் அறிக்கை!







மதுரை, ஏப். 2 -

மதுரைக்கு வருகை வருகை தரும் கழகத் தலை வர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் விமான நிலையத்தில் நாளை (3ஆம் தேதி) மாலை எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாகவும், இதில் கழ கத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமாய் மாவட்டச் செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்கள் அதன் விபரம் வருமாறு:-

நாடு போற்றும் நம் தலைவர், திராவிட மாடல் ஆட்சி நாயகர், மக்கள் போற்றும் தமிழ்நாடு முதல் வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நாளை (3.4.2025 - வியாழக்கிழமை) மாலை 3 மணியளவில் சென்னையிலிருந்து விமா னம் மூலம் மதுரை விமான நிலையம் வந்தடைந்து மது ரையில் பல்வேறு நிகழ்ச்சி யில் பங்கேற்க உள்ளார்.

மதுரைக்கு வருகை தரும் தலைவருக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் விமான நிலையத்தில் கழ கத்தினர் இரு வண்ண கொடியை கையில் ஏந்தி முரசு கொட்டு முழங்க எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்படவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநிலக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர் கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள், கிளைச் செயலாளர் கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற் றும் பதிவுத்துறை அமைச் சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலா ளர் மு.மணிமாறன் ஆகி யோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

### புதுக்கோட்டை வடக்கு - விராலிமலை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில்

# இலுப்பூரில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று மாபெரும் பொதுக்கூட்டம்!

## தமிழன் பிரசன்னா - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன்- செந்தூர் பாண்டி சிறப்புரை!

புதுக்கோட்டை, ஏப். 2–

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி, ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண் டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட் டம் இன்று (2.04.2025 புதன்கிழமை) மாலை 6 மணியளவில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி இலுப்பூரில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.சிவா (எ) சிவக்குமார் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அன்சாரி பாசித் வர வேற்புரையாற்றுகிறார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கள் மு.கலைஞர் கருணாநிதி, இளஞ் சேரன் முத்துசாமி, கே.அறிவழகன், ஒன்றிய, நகரச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, வை.விஜயகுமார், மு. பி.ம.சத்தியசீலன், அ.இளங்கும ரன், கே.பி.ஐயப்பன், ஓ.எஸ்.வெங்க டாசலம், எம்.எஸ்.ஏ.முகமது ரிசா, துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என். போஸ், முன்னாள் ஒன்றிய பெருந்த லைவர், மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம். பழ னியப்பன், எம்.செந்தில்குமார், பேரூராட்சி தலைவர் சகுந்தலா வைர வன், முன்னாள் மாவட்டக் கவுன்சி லர்கள் டி.செல்வம், சாந்தி தங்கசிங் கம், துரை ராஜேந்திரன், ஏ. ஜீவானந்தம், வீ. முடியரசன், ஆர்.எம். கருப்பையா, ஆர்.பாலசுப் பிரமணியன், ஏ.ராஜ் முஹம்மது, எல்.எஸ்.எம். செந்தில்குமார், சி.பன் னீர்செல்வம், ஆர்.திருமுருகன், ஆர். செந்தில், எப்.முகமது ரபீக்,

ஒன்றிய, நகர, இளைஞரணி அமைப்பாளர்கள், துறை அமைப்பா ளர்கள் பே. கோபிநாதன், வா.அழகர் சாமி, நா.சந்தோஷ்குமார், சி.சுதாகர், மு.முகமது மன்சூர், ஆர்.வசந்த், மு. சுரேஷ்குமார், ரா.ஜெயகாந்தி, இரா. தர்மராஜ், ரா.ஜெயகாந்தி, பெ.தன பால், இரா.ராஜ்குமார், அ.தேவராஜ், க.தென்னரசு, மு.ஆறு முகம், ர.காமராஜ், பி.பாண்டியன், சுப்பிரமணி, பி.நாராயணன், ம.சர வணன், மு.அடைக்கலராஜ், த.சசி குமார், க.அழகுராஜா, பி.மகேஷ் குமார், ஹ.ஹாலித் முகமது, சி.சண் முகம், பொ.ராஜா,

ப.ராஜேஷ், மு.பாஸ்கர், ப.பரமசி வம், ஜா. அசாருதீன், ரெ. செந்தில்கு மார், வே.மணிவண்ணன் (எ)மதன், பிரபாகரன் , கே. மகேந்திரன், எம்.பி. தங்கவேல், தமிழழகன், வி.விஜய காந்த், எட்வின், ஜோ.யோகராஜ், புஷ்பராஜ், வசந்தகுமார், மாரிமுத்து, அன்வர் பாஷா, சக்தி, அல்காப் உசேன், நாகராஜ், பாதேஸ்வரன், எஸ்.வி.சங்கர், சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கழக செய்தி தொடர்பு இணைச் செயலா ளர் தமிழன் பிரசன்னா, இளம் தலைமை கழக பேச்சாளர் செந்தூர் பாண்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சட்டத் துறை அமைச்சர் எஸ் ரகுபதி பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச் சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக் கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே கே செல்ல பாண்டியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்ற னர். எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக் டர் வை. முத்துராஜா எம்எல்ஏ, முன் னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதை பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த சந்திரசேகரன், பி.டி.அரசகுமார், அரு.வீரமணி, புதுக்கோட்டை விஜயா, சுப சரவணன், வி.என். மணி, டாக்டர் எஸ். ஆர்.அண்ணா மலை, எம்.எஸ். அசோக் பாண்டி யன், எஸ். எஸ்.கருப்பையா, மதியழ கன், பெ. ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, கீரை தமிழ் ராஜா, என்.சேட்டு, தவ. பாஞ்சாலன், எம்.பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மு.க. ராம கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, குள வாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர். சாமிநாதன், வே.ராஜேஷ், ராய.முத் துக்குமார், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, சி. ஆர்.வி. சித்ரா, உ.முருகேசன், ப.அண்ணாதுரை, க.ரங்கராஜ், திரு ஞானசம்பந்தம், க.நைனா முகமது, எம்.எம்.பாலு, ஆர்.பாலகிருஷ்ணன், ராம. செல்வராஜ், கவிஞர் சௌமா, ஜெகநாதன் கே.எஸ்.ச. இளைய சூரி யன், ஆர்.டி.ஆர் ராமசாமி, அ.பிரபா, உரக்கடை எம்.கருப்பையா, முனை வர் சி.குறிஞ்சிவாணன், மஜீத் முபா ரக், புத்தாம்பூர் எம்.சுப்பையா? டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், செந் தாமரை பாலு, வி.என்.எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், டி.எம். ஆர்.ராமமூர்த்தி, பொன்.பாரி வள் ளல், டி.சூசைராஜ், வழக்கறிஞர் வீரய்யா, கவிவேந்தன், சி.அரங்க நாயகம், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், எம்.ராஜா, கா.இளவர சன், தவசுமணி, கே.கணபதி, எம். வேலுச்சாமி, இ.பி.சண்முகம், பூங் குடி எம்.சிவக்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் விராலிமலை மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சு.சிவகுமார், விராலிமலை மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ம. பாலசுப்பிரமணியம், இலுப்பூர் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் பேரூராட்சி துணைத் தலைவர் இ. செந்தில் ராஜா ஆகியோர் நன்றி உரையாற்றுன்றனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு தரவேண்டிய நிதியை உடனடியாக வழங்க வேண்டும் எனக் கோரியும், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே ஆர்.என். இராஜேஸ் குமார் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் இராசிபுரம் ஒன்றிய செயலாளர் கே.பி.ஜெகநாதன், இராசிபுரம் நகர செயலாளர் என்.ஆர்.சங்கர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தி ரைசிங் சன் ஆங்கில இதழ் ஆசிரியர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் துவக்கி வைத்து உரையாற்றினார். இதில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எ.வி.கல்பனா, பேச்சுப்போட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் உள்பட ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .